**Judicial Form No. 53**
**[See Rule 42]**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**.............**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI**

Case Case No.CC.No. 46 /2023

Deposition of Sworn Statement

| | |
|---|---|
| Name | :தமிழ்செல்வன் |
| Father's Name/Husband Name | :கனேசன் |
| Village | :வரதகவுண்டனுர் |
| Taluk | :பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : PW3 |
| Religion | : Hindu |
| Age | :29 |

**Solemnly affirmed in accordance with 7h the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15.10.2025**

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது வரதகவுண்டனுரில் வசித்து கொண்டு நெசவு தொழில் செய்து வருகிறேன்.

சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் நான் கடைக்கு சென்று விட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது அ.சா.1ன் வீட்டு முன்பு போலிசார் என்னை நிறுத்தி ஒரு கையொப்பம் கேட்டார்கள். இன்று என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் நான் கையொப்பம் இட்டேன். அன்றைய தினம் நான் கையொப்பம் இட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசுதரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக்கி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரி எனது உறவினர் மாமா ஆவார்.

எதிரியும் நானும் ஒரே ஊரில் வசிக்கிறோம் என்றார் சரிதான்

கடந்த 09.04.2021 காலை 9.00 மணியளவில் பாப்பிரெட்டிப்படடி காவல் நிலைய போலிசார் வழக்கின் சம்பவயிடதை பார்வையிட்டு படம் வரைந்த மகஜர் தயார் செய்தார்கள் என்றும் அந்த மகஜரில் நான் சாட்சிாயக கையொப்பம் இட்டேன் என்றும் போலிஸ் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது எதிரி எனது உறவினர் என்பதால் அவருக்கு சாதகமாக மாற்றி சாட்சிய அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிப்பட்டி**